ரூபாய்க்கான திட்டம் இந்த அணுகுமுறையின் அடிப்படையிலேயும் நம்முடைய மாநிலத்தின் தேவைகளைப்பற்றிய நிலையை மனத்திலே வைத்துக் கொண்டும் திட்டப்பட்டதாகும். இதைப் பிறகு அரசு பரிசீலித்துத்தான், எவ்வளவு தொகை மத்திய அரசைக் கேட்பது என்று முடிவு எடுக்கும்.

திரு. எ. சுப்பிரமணியம் : 1,300 கோடி ரூபாய் செலவிற்கு திட்டமிட்டிருப்பதாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். இதற்கான வருவாய் வாய்ப்புகள் எந்த எந்த வகையில் எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது அந்தந்த மாநிலத்தினுடைய ரிஸோர்ஸஸ் அடிப்படையில்தான் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். இன்றைக்குத் தான் நம்முடைய மாநிலத் திட்டக் குழு அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறது. திட்டத்திற்கு மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கப்படவேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்தெந்த சாத்தியக்கூறுகளில் அந்த வருமானங்கள் கணக்கிடப்படும் என்ற விவரங்களை என்றால் இப்பொழுது சொல்ல முடியாது. ஏனென்றால், மாநிலத் திட்டக் குழுவின் அறிக்கை முழுவதையும் நான் படிக்கவில்லை. அறிக்கை இப்பொழுதுதான் வந்திருக்கிறது.

தகவல் நிலையங்கள்

* 582 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ள தகவல் நிலையங்கள் (Information Centres) எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ் நாட்டில் தற்போது சென்னையில் மாநிலத் தகவல் நிலையம் ஒன்றும், மதுரையில் ஒரு தகவல் நிலையமும், தஞ்சாவூரில் ஒரு தகவல் நிலையமும் ஆக மொத்தம் மூன்று தகவல் நிலையங்கள் உள்ளன.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தத் தகவல்கள் முக்கியமாக ஆற்றும் பணிகள் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கு நூல் நிலையங்கள், படிப்பகங்கள் இவைகளெல்லாம் இருக்கின்றன. அவற்றின் மூலமாக அரசைப் பற்றிய தகவல்களையும் பல்வேறு இலாக்காக்களைப்பற்றிய தகவல்களையும் தெரிந்து கொள்ளலாம்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவையில் ஒரு தகவல் நிலையத்தை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ? இந்த ஆண்டே அதைத் துவக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது இருப்பது மூன்று தகவல் நிலையங்கள்தான். வேறு எங்கெங்கு நிறுவுவது என்பதுபற்றிப் பிறகு யோசிக்கப்படும்.

திரு. நா. வே. குருசாமி: தலைவர் அவர்களே, மாநிலத் திட்டக் குழுவினர் 1,300 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டியிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'ரிவர்ஸி'ல் போகிறீர்களே.

திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் இதுபோன்ற நிலையங்கள் அமைக்கப்படும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கோவையைப்பற்றி கேட்ட கேள்விக்கு நான் அளித்த பதில்தான் இதற்கும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இந்த தகவல் நிலையங்கள் தகவல் சேகரிக்கும் நிலையங்களாகவும், மக்கள் குறைகள் அந்தந்தப் பகுதிகளில் என்னென்ன என்பதை அரசுக்கு அறிவிக்கும் நிலையங்களாகவும் செயல்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது அங்கிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். சேகரித்த தகவல்களை மற்றவர்கள் பெற்றுக்கொள்ள வசதி இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த தகவல் நிலையங்களில் மாநிலத்தின் பல்வேறு நிலைமைகளைப்பற்றி ஆராய ஏதேனும் 'ரெபரன்ஸ் புக்ஸ்' இருக்கிறதா? இல்லை என்றால் 'ரெபரன்ஸ் புக்ஸ்' வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூடுமானவரையில் அதற்கான நூல்கள் இருக்கின்றன. அவை போதவில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை பரிசீலனை செய்யலாம்.

திரு. வை. பாலசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, இந்தத் தகவல் நிலையங்களில் தமிழ் இலக்கியங்களைப்போல பிறமொழி இலக்கியங்களையும் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அங்கு நூலகங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை தேவை என்றால் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன்: தகவல் நிலையங்களில் பொது மக்களுக்கு அத்தியாவசியமான சில சாமான்களைப் பெறுவதற்கு கஷ்டமாக இருக்கின்ற நேரங்களில் அவர்களின் கஷ்டத்தைப் போக்குகின்ற வகையில்

1973 ஏப்ரல் 3]

என்னென்ன பொருட்கள் எங்கெங்கே கிடைக்கும் என்ற விபரங்களை தெரிவிப்பார்களா? அதுமட்டுமல்லாமல் 'சிட்கோ' போன்ற நிறுவனங்களில் இருந்து பாரங்களை எப்படி பூர்த்தி செய்வது, எந்தெந்த வகையில் கடனைப் பெறலாம் என்று அவர்கள் பொதுமக்களுக்கு தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டத் தகவல்களைப் போன்றவைகளை அறிவிப்பதற்கு வேறு பல துறைகள் இருக்கின்றன. அவைகள் மூலமாக அந்தத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, 'இன்ஃபர்மேஷன் சென்டர்'களில் எல்லாம் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்? அவர்களுக்கு ஆகும் செலவு என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒவ்வொரு தகவல் நிலையத்திற்கும் 25,000 ரூபாய் அளவுக்குச் செலவாகிறது. எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள் என்ற விபரம் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த 'இன்ஃபர்மேஷன் சென்டர்'களில் தகவல் கொடுக்கக்கூடியவர்கள் ஆண்களா அல்லது பெண்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் இப்படி ஒரு கேள்விவரும் என்று அதற்கான விபரத்தைச் சேகரிக்கவில்லை.

திரு. கே. என். குமாரசாமி: விளம்பர இலாகா என்று ஒவ்வொரு ஜில்லா ஹெட்குவார்ட்டர்சிலும் இருக்கிறது. அதோடு இந்த இலாகாவை ஒன்றுபடுத்தி, ஒரே அமைப்பாக உருவாக்க அரசுக்கு யோசனை உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த தகவல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்ற இடங்களில் அந்த இலாகாவோடு இணைந்து பணியாற்றுகிறார்கள். மற்ற இடங்களிலும் தகவல் நிலையங்கள் அமைக்கப்பட்டால் அவர்களும் விளம்பர இலாகாவோடு இணைந்து பணியாற்றும் நிலைமை ஏற்படும்.

Railway Cess Fund.

*611 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether the Railway Cess Fund for 1971–72 has been distributed among Panchayat Unions in the State; and

(*b*) if so, the details thereof?